முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண் 229/2018

வா.சா.3 – ரமேஷ்

07–03–2022

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

_ நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கதவு எண் தெரு எதையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டையில் கதவு எண் தெரு குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இறப்புச் சான்றிதழ் வாங்க பிற்ப்பு மற்றும் இறப்பு பதிவாளரிடம் மனு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அந்த மனுவை பதிவாளர் விசாரணை செய்து பதிவு செய்வார் என்றால் சரிதான். பதிவு செய்த சான்றிதழை வேறொரு தேதியில் பதிவாளர் வழங்குவார் என்றால் அவ்வாறில்லை 3 நாட்களுக்குள் வழங்குவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் 30–4–2018 ல் பதிவு செய்யப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். 09–05–2018ம் தேதி அன்று தான் இறப்பு சான்றிதழ்(வா.சா.ஆ.1) வாங்கப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மனோகரி என் மீது வீரபாண்டி காவல் நிலையத்தில் 29–05–2018 ல் புகார் அளித்தாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் மருமகன் முருகேசன் தான் என்மீது புகார் அளித்தார். வீரபாண்டி காவல் நிலையத்திலிருந்து என் மீது அளித்த புகாரின் அடிப்படையில் என்னை விசாரித்தார்கள். விசாரணையின்போது இறந்துபோன ராகவன் என்பவரின் ஆதார் அட்டை மற்றும் இறப்புச் சான்றிதழ் ஆகியவற்றை முருகேசனிடம் அளிக்க வீரபாண்டி காவல்நிலையத்தில் சொன்னார்கள் என்றால் சொன்னார்கள் நான் ராகவனின் ஆதார் அடையாள அட்டையை 1ம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன். என் மீது புகார் அளித்த பிறகு தான் நான் 1ம் பிரதிவாதியின் மருமகன் முருகேசன் மீது வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் அவர் என்னை அடித்ததால் நான் புகார் அளித்தேன். வீரபாண்டி காவல் நிலையத்தில் நான் அளித்த புகாருக்கான முதல் தகவல் அறிக்கையில் இதற்கு முன்பாகவே முதல் மனைவியின் மருமகன் பெயர் முருகேசன் என்பவர் தொலைபேசியில் மிரட்டினார் என்ற வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். ராகவனின் இறப்புச் சான்றிதழில் 1ம் பிரதிவாதியின் பெயரை நீக்க மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தும் பெயர் எதுவும் நீக்கப்படவில்லை என்றால்

சரிதான். இறந்த ராகவனின் பெயரில் வீடுள்ளது என்றால் சரிதான். இறந்த ராகவனின் பெயரிலுள்ள வீட்டை வாதிகள் அபகரிக்க நான் துாண்டுகோலாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் இறந்துபோன ராகவனின் சட்டப்படியான வாரிசுகள் இட்லலை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1,2 ஆகியோர் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளுக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

(மேற்படி 1,2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை 3,4 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது)

குறுக்கு விசாரணை முடிந்தது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது,

K VIGNESMADHU

Digitally signed by K VIGNESMADHU
Date: 2022.03.07 12:57:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.